செ.வெ.எண்: 49 – 2020 நாள்:23.03.2020

**இன்று (23.03.2020) விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக மைதானத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் செவிலியர் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் பொதுமக்களிடம் கொரேனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாக மைதானத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் செவிலியர் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் பொதுமக்களிடம் கொரேனா வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தனியார் பள்ளி மற்றும் கல்லூரி வாகனங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு 5 கிராமங்கள் வீதம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட அனைத்து கிராமங்களிலும் 500-க்கும் மேற்பட்ட செவிலியர் கல்லூரி மாணவ, மாணவியர்கள் கொரோனா வைரஸ் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி.ஸ்ரேயா.பி.சிங்.இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வெ.மகேந்திரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.செந்தில்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.